கனம் திரு. எம். பக்தவத்சலம்: நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. ஒரு திட்டம் எடுத்துக் கொள்ளும்போது இந்த நிலம் அதற்காக ஒதுக்கப்படலாம் என்ற முறையில் இடம் காட்டப்பட்டது. இதோ தகுதியான நிலம் இருக்கிறது என்று காட்டப்பட்டது. பிறகு, இதை மத்திய அரசாங்கம் வேறு இடத்தில் வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் எனக்குத் தெரியாது. இங்கே வைக்கலாம் என்று நாங்கள் தெரிவித்திருந்தோம்.

திரு. இராம. அரங்கண்ணல்: தமிழகம் கடலோரப் பகுதி நிரம்பிய பிரதேசம் என்ற காரணத்தால், மீன் பிடிக்க வசதியாக இருக்கிறது என்ற காரணத்தால் தமிழகத்திலே இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் வற்புறுத்துமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கருத்தை இந்த அரசு தெரிவித்திருக்கிறது.

அரசாங்கத் தொழில் பட்டறை, வேலூர்

***110 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், வேலூர் நகரத்தில் உள்ள அரசாங்கத் தொழில் பட்டறையில் 1965 ஜனவரி முதல் 1966 ஜனவரி 30-ம் தேதி முடிய கட்டில், பீரோ முதலிய பர்னிச்சர் எவ்வளவு மதிப்புள்ள சாமான்கள் தயாரிக்கப்பட்டன?

(இ) மேற்படி ஆண்டில் அதன் லாப நஷ்டக் கணக்கு என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) வேலூரிலுள்ள பொது நோக்குப் பொறியியல் பட்டறையைப்பற்றி கனம் உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். அவ்வாறாயின் இப்பட்டறையில் 1965 ஜனவரி முதல் 1966 ஜனவரி 30-ம் தேதி வரையில் ரூ. 13,55,378 மதிப்புள்ள கட்டில், அலமாரி போன்ற சாமான்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) இப்பட்டறையின் மூலம் 1—1—1965 முதற்கொண்டு 30—1—1966 வரை ரூ. 2.49 லட்சம் லாபம் கிடைத்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் கூட்டுறவு நூற்பாலை

***111 கேள்வி.—திரு. பி. முருகையன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்க சர்க்கார் அனுமதி அளித்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், எப்போது அனுமதி வழங்கப்பட்டது?

5th August 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) **Yes.** A co-operative spinning mill is at present functioning in Srivilliputhur.

(*b*) The licence for starting the mill was issued on 24th January 1959.

திரு. பி. முருகையன் : இந்தக் கூட்டுறவு நூற்பாலை நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறதா? எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்? அதன் தலைவர் யார்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

Cultivable land along Rail-track

* 112 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Southern Railways have handed over cultivable lands along the Rail track to the Government for growing more food; and

(*b*) if so, the conditions thereunder and the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) அடியிற்கண்ட நிபந்தனைகளை விதித்துள்ளனர்—

(1) ரயில்வே நிர்வாகத்தைச் சேர்ந்த தரிசு நிலங்கள் அனைத்தின் குத்தகைக் கால அளவு முதற்கண் மூன்றாண்டுக் கால அளவாக நிச்சயிக்கப்பட வேண்டும். குத்தகைக்காரர் அந்நிலங்களைத் தக்கவாறு பயன்படுத்தியிருந்தால், அந்நிலங்கள் அக்குத்தகைக்காரருக்கே அதே நிபந்தனைகளின் அடிப்படையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்படலாம்.

(2) ஐந்தாண்டுக் கால அளவுக்கும் அதற்கு மேற்பட்ட கால அளவுக்கும் தொடர்ந்து விளைவிக்கப்பட்டுவரும் நிலங்கள் அனைத்தும் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட வேண்டும்; இக்குத்தகை ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

(3) நிலங்களிலிருந்து பெறப்படும் குத்தகைத் தொகையில் 95 சதவிகிதத் தொகை ரயில்வே நிர்வாகத்திற்கும் எஞ்சிய 5 சதவிகிதத் தொகை, அந்த நிலங்களை நிர்வகித்ததற்காக மாநில அரசாங்கத்திற்கும் வரவு வைக்கப்பட வேண்டும்.

(4) ரயில்வே நிர்வாகம் இந்த நிலத்தை எச்சமயத்திலும் இழப்பீடு கொடுக்காமலே மீண்டும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அப்படிச் செய்வதானால் முடிவுறாமல் நிற்கும் குத்தகைக் கால அளவுக்கான விகிதாசார குத்தகைத் தொகையை குத்தகைக்காரருக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டால் போதும்.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி எந்த அளவுக்கு நிலம் நம்முடைய அரசாங்கத்திற்கு இதன் மூலம் கிடைக்க இருக்கிறது? இதிலே குத்தகைக்கு விடுவதற்குப் பூரண உரிமை இருக்கிறதா?